# அரசு துணைத்தேர்வு – அக்டோபர் 2016

## வினாத்தாள் – விடைகளுடன்

## பத்தாம் வகுப்பு - சமூக அறிவியல்

நேரம் : 2½ மணி | மொத்த மதிப்பெண்கள் : 100

**பிரிவு – I**

மதிப்பெண்கள் : 24

**பகுதி – I**

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க. **14 × 1 = 14**

(i) **சரியான** விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் இங்கிலாந்து சீனாவிற்காக ஏற்படுத்திய கொள்கை :
   அ) திறந்த வெளிக் கொள்கை
   ஆ) வாரிசு இழப்புக் கொள்கை
   இ) பாதுகாக்கப்பட்ட வியாபாரக் கொள்கை
   ஈ) நிலம் அழித்தல் கொள்கை
2. முசோலினியின் இரகசிய காவல் படை _____ என்று அழைக்கப்பட்டது.
   அ) ஓவ்ரா ஆ) கெஸ்டபோ
   இ) நாசிசம் ஈ) பாசிசம்
3. வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகத்தை நடத்தியவர்:
   அ) டி. எஸ். ராஜன்
   ஆ) பக்தவச்சலம்
   இ) இராஜகோபாலாச்சாரி
   ஈ) வ.உ.சி
4. வைக்கம் அமைந்துள்ள இடம் :
   அ) தமிழ் நாடு ஆ) கேரளா
   இ) ஆந்திரப்பிரதேசம் ஈ) கர்நாடகம்
5. அணு ஆயுத குறைப்பு தீர்மானத்தை ஐ.நா. பொது சபையில் இந்தியா கொண்டு வந்த ஆண்டு :
   அ) 1965 ஆ) 1976
   இ) 1995 ஈ) 1956
6. தற்காலத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற அரசாங்க முறை :
   அ) மக்களாட்சி ஆ) குடியாட்சி
   இ) உயர் குடியாட்சி ஈ) சர்வாதிகாரம்
7. உலக நுகர்வோர் தினமாக கொண்டாடப்படுவது :
   அ) மார்ச் 11 ஆ) மார்ச் 14
   இ) மார்ச் 15 ஈ) மார்ச் 16
8. தென்மேற்கு பருவக்காற்று திசைக்கு இணையாக அமைந்துள்ள மலைத்தொடர் _________.
   அ) விந்தியா ஆ) ஆரவல்லி
   இ) சாத்பூரா ஈ) மைக்காலா
9. வறண்ட நிலப்பகுதியில் காணப்படும் மண் _________ ஆகும்.
   அ) வண்டல் மண் ஆ) கருப்பு மண்
   இ) சரளை மண் ஈ) பாலை மண்
10. சோட்டாநாகபுரி பீடபூமி _________ வளத்திற்கு புகழ் பெற்றது.
    அ) கனிம வளம் ஆ) இயற்கைத் தாவரம்
    இ) பருத்தி ஈ) வண்டல் மண்
11. நம் நாட்டில் குறைந்த செலவு மற்றும் அனைவராலும் பயன்படுத்தப்படும் போக்குவரத்து _________:
    அ) நீர் வழி ஆ) வான்வழி
    இ) சாலை வழி ஈ) குழாய் வழி
12. தலா வருமானம் சுட்டிக்காட்டுவது _________:
    அ) மக்களின் செல்வ நிலையை
    ஆ) மக்களின் வாழ்க்கைத் தரத்தை
    இ) மக்களின் ஏழ்மை நிலையை
    ஈ) மக்களின் கல்வி நிலையை
13. பூமிதான இயக்கத்தை தொடங்கியவர்
    அ) ஜெயபிரகாஷ் நாராயண்
    ஆ) ஜவஹர்லால் நேரு
    இ) டாக்டர். ராஜேந்திர பிரசாத்
    ஈ) ஆச்சார்ய வினோபாபாவே
14. இந்தியாவில் அதிக விழுக்காடு கல்வியறிவு பெற்ற மாநிலம் _________.
    அ) கோவா ஆ) தமிழ்நாடு
    இ) கேரளா ஈ) ஆந்திரபிரதேசம்

**பகுதி – II**

**குறிப்பு : இரு** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

15. பொருத்துக: **2 × 5 = 10**

(i)

| | | |
|---|---|---|
| அ) | உட்ரோ வில்சன் | – பான்கிமூன் |
| ஆ) | மெயின்காம்ப் | – இராஜாராம் மோகன்ராய் |
| இ) | தற்போதைய ஐ.நா. பொதுச் செயலாளர் | – டாக்டர்.எஸ்.தருமாம்பாள் |
| ஈ) | நவீன இந்தியாவின் விடிவெள்ளி | – அமெரிக்கா |
| உ) | வீரத் தமிழன்னை | – கோபி அனான் |
| | | – எனது போராட்டம் |
| | | – இங்கிலாந்து |



SURA BOOKS

| | |
|---|---|
| (ii)அ) லாவா பீடபூமி | – பஞ்சாப் |
| ஆ) கரிசல் மண் | – பிரெஞ்சு மேப்பியலாளர்கள் |
| இ) இந்தியாவின் சர்க்கரை கிண்ணம் | – தக்காணம் |
| ஈ) தெற்கு இரயில்வே | – ஹைதராபாத் |
| உ) காற்றில் மிதக்கும் பலூன் | – உத்திரப்பிரதேசம் |
| | – சென்னை |
| | – பருத்தி பயிரிடுதல் |

## பிரிவு – II

(மதிப்பெண்கள் : 20)

**குறிப்பு :** (i) ஏதேனும் **பத்து** வினாக்களுக்கு சிறு விடை தருக. **10 × 2 = 20**

(ii) பகுதி **I** இல் **நான்கு** வினாக்கள், பகுதி **II** இல் **ஒரு** வினா,பகுதி **III** இல் **நான்கு** வினாக்கள் மற்றும் பகுதி **IV** இல் ஒரு வினாவும் தேர்வு செய்க.

### பகுதி – I

16. ஏகாதிபத்தியம் – வரையறு.
17. முதல் உலகப்போரில் அமெரிக்கா ஈடுபட்டதற்கான காரணம் என்ன?
18. சுயராஜ்யக் கட்சி – சிறு குறிப்பு வரைக.
19. ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய நோக்கங்கள் யாவை?
20. பெரும் புரட்சியில் ஈடுபட்ட முக்கியத் தலைவர்கள் மற்றும் முக்கிய இடங்களைக் குறிப்பிடுக.
21. 19–ஆம் நூற்றாண்டின் சமூக மற்றும் சமய சீர்திருத்த இயக்கங்களின் விளைவுகளைக் குறிப்பிடுக.
22. காமராஜரின் நலத்திட்டப் பணிகள் பற்றி குறிப்பு வரைக.
23. பெரியார் வைக்கம் வீரர் என ஏன் அழைக்கப்பட்டார்?

### பகுதி – II

24. இந்தியா – ஐ.நா.வின் தீவிர ஆதரவாளர்–இக்கூற்றை நியாயப்படுத்து.
25. ஜனநாயகம் பற்றி ஆபிரகாம் லிங்கனின் கருத்தை எழுதுக.

### பகுதி – III

26. இந்தியாவின் முக்கிய இயற்கை அமைப்புப் பிரிவுகள் யாவை?
27. இந்தியக் காலநிலையை நிர்ணயிக்கும் காரணிகளின் பெயர்களை எழுதுக.
28. வெப்ப மண்டல பசுமை மாறாக் காடுகளின் ஏதேனும் நான்கு அம்சங்களை குறிப்பிடுக.
29. வேளாண் தொழிலின் வகைகள் யாவை ?
30. ஏதேனும் ஐந்து மென்பொருள் மையங்களை குறிப்பிடுக.
31. எல்லையோர சாலைகளின் முக்கியத்துவம் யாது?
32. மக்கள் தகவல் தொடர்பு சாதனங்கள் ஏதேனும் நான்கினை கூறுக.
33. பேரிடர் அபாய நேர்வு குறைப்பின் முக்கிய அம்சங்கள் யாவை?

### பகுதி – IV

34. நாட்டு வருமானத்தை வரையறு.
35. பசுமைப் புரட்சி குறித்து சிறு குறிப்பு வரைக.

## பிரிவு – III

(மதிப்பெண்கள் : 8)

**குறிப்பு : ஏதேனும் நான்கினை** வேறுபடுத்திக் காட்டுக. **4 × 2 = 8**

36. இமயமலையில் உருவாகும் ஆறுகள் – தீபகற்ப ஆறுகள்.
37. தென்மேற்கு பருவக் காற்று – மற்றும் வடகிழக்குப் பருவக் காற்று.
38. காற்று சக்தி மற்றும் அனல் மின் சக்தி.
39. காரிஃப் மற்றும் ராபி பயிர்கள்.
40. வேளாண் சார்ந்த மற்றும் கனிமம் சார்ந்த தொழிலகங்கள்.
41. நீர் மாசடைதல் – நிலம் மாசடைதல்
42. ஏற்றுமதி – இறக்குமதி
43. நேரிணை வணிகம் – பல்கிளை வணிகம்.

## பிரிவு – IV

(மதிப்பெண்கள் : 8)

**குறிப்பு :** கீழ்க்கண்ட தலைப்புகளில் **இரண்டினைத் தேர்ந்தெடுத்து** அவற்றின் அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **2 × 4 = 8**

44. **சர்வதேச சங்கம்:**

(அ) சர்வதேச சங்கத்திற்கு முன் தோன்றிய சில சர்வதேச அமைப்புகளின் பெயர்களை எழுதுக.

(ஆ) சர்வதேச சங்கத்தின் தலைமையகம் எங்கு அமைந்துள்ளது?

(இ) உறுப்பு நாடுகள் தங்கள் பிரச்சனைகளுக்கு எவ்வாறு தீர்வு காண வேண்டும்?

(ஈ) ஜப்பான் எப்போது மஞ்சூரியாவைக் கைப்பற்றியது?

SURA BOOKS

45. **பாசிசக் கட்சி:**
(அ) பாசிசக் கட்சியைத் தோற்றுவித்தவர் யார்?
(ஆ) முசோலினியின் முழக்கம் பற்றி எழுதுக.
(இ) பாசிசத்தின் நோக்கங்கள் என்ன?
(ஈ) பாசிசத்தின் குறிக்கோள் என்ன?

46. **மத்திய இந்தியாவில் பெரும் புரட்சி :**
(அ) மத்திய இந்தியாவில் புரட்சியை வழி நடத்திச் சென்றவர் யார்?
(ஆ) இராணி இலட்சுமிபாய் கைப்பற்றிய நகரம் எது?
(இ) இராணி இலட்சுமிபாயின் முடிவு என்ன?
(ஈ) தாந்தியா தோப்பிற்கு நிகழ்ந்தது என்ன?

47. **மவுண்ட் பேட்டன் திட்டம் :**
(அ) 1947–ஆம் ஆண்டு இந்திய கவர்னர் ஜெனரலாகப் பதவியேற்றவர் யார்?
(ஆ) ஆங்கிலேய கடைசி கவர்னர் ஜெனரல் யார்?
(இ) மவுண்ட் பேட்டன் திட்டம் என்றால் என்ன?
(ஈ) மவுண்ட் பேட்டன் திட்டத்திற்கு காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக்கின் பிரதிபலிப்பு என்ன?

## பிரிவு – V
(மதிப்பெண்கள் : 20)

**குறிப்பு :** **ஒவ்வொரு வினா** எண்ணிலும் உள்ள மூன்று வினாக்களில் **ஒன்றினைத்** தேர்வு செய்து **நான்கு** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

**4 × 5 = 20**

### பகுதி – I
48. அ) ஏகாதிபத்தியத்தின் விளைவுகள் யாவை?
(அல்லது)
ஆ) ஐ.நா.வின் முக்கியமான சாதனைகளை எழுதுக.
(அல்லது)
இ) உப்பு சத்தியாகிரகம் பற்றி எழுதுக.

### பகுதி – II
49. அ) சார்க் அமைப்பு பற்றி எழுதுக.
(அல்லது)
ஆ) தேர்தல் முறையைப் பற்றி குறிப்பிட்டு, அவற்றைப் பற்றி விளக்கம் தருக.
(அல்லது)
இ) நுகர்வோர் உரிமைகள் பற்றி எழுதுக.

### பகுதி – III
50. அ) மழைநீர் சேகரிப்பினை விளக்குக.
(அல்லது)
ஆ) அமில மழையின் விளைவுகள் யாவை?
(அல்லது)
இ) பேரிடர் அபாய நேர்வு குறைப்பில் ஆரம்ப முன்னெச்சரிக்கை அமைப்பின் முக்கியத்துவம் பற்றி எழுதுக.

### பகுதி – IV
51. அ) நாட்டு வருமானத்தின் இரண்டு அடிப்படை கருத்துக்களை விவரி.
(அல்லது)
ஆ) பசுமைப் புரட்சியை விளக்குக.
(அல்லது)
இ) தமிழ்நாட்டின் மின்சக்தி திட்டங்களை விவரி.

## பிரிவு – VI
(மதிப்பெண்கள் : 5)

**குறிப்பு :** கீழ்க்கண்டவற்றிற்கு காலக்கோடு வரைக.

52. 1910 முதல் 1930 வரையிலான எவையேனும் ஐந்து வரலாற்று நிகழ்வுகளை காலக்கோட்டில் எழுதுக.

## பிரிவு – VII
(மதிப்பெண்கள் : 15)

**குறிப்பு : வரைபட வினாக்கள்.**

53. (அ) ஆசிய வரைபடத்தில் கீழ்க்கண்டவற்றினை குறிக்கவும்.
(i) பார்மோசா
(ii) சாகலின் தீவுகள்
(iii) பசிபிக் பெருங்கடல்
(vi) மஞ்சூரியா
(v) காண்டன்
(அல்லது)
(ஆ) இந்திய வரைபடத்தில் கீழ்க்கண்டவற்றினைக் குறிக்கவும்.
(i) காஷ்மீர் (ii) அமிர்தசரஸ்
(iii) சௌரிசௌரா (iv) தண்டி
(v) வேதாரண்யம்

54) கொடுக்கப்பட்ட இந்திய வரைபடத்தில் ஏதேனும் பத்து இடங்கள் / பகுதிகளைக் குறிப்பிடுக.
(i) பாமீர் முடிச்சு
(ii) கங்கை ஆறு
(iii) சோட்டா நாகபுரி பீடபூமி
(iv) வட சர்க்கார் கடற்கரை
(v) தென்மேற்கு பருவக்காற்று வீசும் திசை
(vi) அந்தமான நிக்கோபார் தீவுகள்
(vii) பருத்தி விளையும் ஒரு பகுதி
(viii) சென்னை
(ix) தார் பாலைவனம்
(x) மன்னார் வளைகுடா
(xi) சில்கா ஏரி
(xii) சுந்தரவனம்
(xiii) ஜாம்ஷெட்பூர்
(xiv) கொச்சி
(xv) பாக்ஜலசந்தி

***

SURA BOOKS

# விடைகள்

## பிரிவு – I

### பகுதி – I

1. அ) திறந்த வெளிக் கொள்கை
2. அ) ஓவ்ரா
3. இ) இராஜகோபாலாச்சாரி
4. ஆ) கேரளா
5. ஈ) 1956
6. அ) மக்களாட்சி
7. இ) மார்ச் 15
8. ஆ) ஆரவல்லி
9. ஈ) பாலை மண்
10. அ) கனிம வளம்
11. இ) சாலை வழி
12. ஆ) மக்களின் வாழ்க்கைத் தரத்தை
13. ஈ) ஆச்சார்ய வினோபாபாவே
14. இ) கேரளா

### பகுதி – II

**15. பொருத்துக:**

(i) அ) உட்ரோ வில்சன் – அமெரிக்கா
ஆ) மெயின்காம்ப் – எனது போராட்டம்
இ) தற்போதைய ஐ.நா. பொதுச் செயலாளர் – பான்கிமூன்
ஈ) நவீன இந்தியாவின் விடிவெள்ளி – இராஜாராம் மோகன்ராய்
உ) வீரத் தமிழன்னை – டாக்டர்.எஸ்.தருமாம்பாள்

(ii) அ) லாவா பீடபூமி – தக்காணம்
ஆ) கரிசல் மண் – பருத்தி பயிரிடுதல்
இ) இந்தியாவின் சர்க்கரை கிண்ணம் – உத்திரப்பிரதேசம்
ஈ) தெற்கு இரயில்வே – சென்னை
உ) காற்றில் மிதக்கும் பலூன் – பிரெஞ்சு மேப்பியலாளர்கள்

## பிரிவு – II

### பகுதி – I

16. 'ஏகாதிபத்தியம்' என்பது மூன்றுவிதமாக வரையறுக்கப்பட்டுள்ளது.
   i) 'ஏகாதிபத்தியம்' என்பது, ஒரு நாடு பிற நாடுகளின் பகுதிகளை வலுக்கட்டாயமாக வென்று அவற்றை தனது ஆட்சியின் கீழ் கொண்டு வருதல்.
   ii) ஒரு நாட்டின் ஆட்சி மற்றொரு நாட்டின்மீது திணிக்கப்படுதல்.
   iii) ஒரு நாடு மற்றொரு நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார அதிகாரங்களைத் தன்வசப்படுத்தி அந்நாட்டின் இயற்கை வளங்களை பயன்படுத்திக் கொள்ளுதல்.

17. **முதல் உலகப் போரில் அமெரிக்கா ஈடுபட்டதற்கான காரணம் :**
   i) 1917–ஆம் ஆண்டு லூசிடானியா உட்பட நான்கு அமெரிக்க வணிகக் கப்பல்களை ஜெர்மானிய நீர்மூழ்கிக் கப்பல்கள் மூழ்கடித்ததில் நூற்றுக்கணக்கான அமெரிக்கர்கள் கொல்லப்பட்டனர்.
   ii) இந்நிகழ்ச்சி அமெரிக்கக் குடியரசுத் தலைவர் உட்ரோ வில்சனை கோபமுறச் செய்ததால் அவர் 1917 ஆம் ஆண்டு ஏப்ரல் 6 ஆம் நாள் ஜெர்மனி மீது போர் அறிவிப்பு செய்தார்.

18. i) **சுயராஜ்ஜியக் கட்சி :** சௌரி சௌரா சம்பவத்திற்குப்பின் காந்தியடிகள் சிறையில் அடைக்கப்பட்டார். எனவே சுதந்திர போராட்டத்தை தொடர்ந்து நடத்துவதற்காக **சி.ஆர். தாஸ்** மற்றும் **மோதிலால் நேரு** ஒன்று **சேர்ந்து சுயராஜ்ஜியக் கட்சியைத் தோற்றுவித்தனர்.**
   ii) **1923**–ஆம் ஆண்டு தேசிய இயக்கத்தை வழிநடத்த தோற்றுவிக்கப்பட்ட இக்கட்சி **சுதந்திர போராட்டத்தைத் தலைமையேற்று நடத்தியது.**
   iii) இக்கட்சி நிறுவனர் **சி.ஆர்.தாஸ் மரணமடைந்ததால் 1925**–ஆம் ஆண்டு **சுயராஜ்ஜியக் கட்சியும் கலைக்கப்பட்டது.**

19. **ஐக்கிய நாடுகள் முக்கிய நோக்கம் :**
   i) உலக அரங்கில் அமைதி மற்றும் பாதுகாப்பை நிலைநாட்டுதல்.
   ii) அனைத்து நாடுகளுக்கிடையே நட்புறவை வளர்த்தல்.
   iii) நாடுகளுக்கிடையேயான சிக்கலை அமைதியான முறையில் தீர்த்தல்.

20. i) **முக்கியத் தலைவர்கள் :**
   இராணி இலட்சுமிபாய், நானாசாகிப், தாந்தியாதோப் பேகம் ஹஸ்ரத் மஹால், கன்வர்சிங்.
   ii) **முக்கிய இடங்கள் :**
   பாரக்பூர், மீரட், கான்பூர், டெல்லி, லக்னோ, மத்திய இந்தியா, பரெய்லி, பீகார், ஆக்ரா, பனாரஸ், ஜான்ஸி, பண்டேல்கண்டு.

21. i) உடன்கட்டை ஏறுதல், குழந்தைத் திருமணங்கள், தீண்டாமை போன்றவை ஒழிந்தன.
   ii) பெண் கல்வி, விதவைகள் மறுமணம், கலப்புத் திருமணங்கள், சமபந்தி உணவுமுறை ஆகியவை பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டன.
   iii) சமுதாய எழுச்சி, தேசிய உணர்வு மக்களிடையே பெருகியது.
   iv) தங்களின் கலாச்சாரம் மற்றும் அதன் பெருமைகளை மக்கள் அறிந்து கொண்டார்கள்.
   v) அறிவியல் மற்றும் நேர்மையான வழியில் பிரச்சனைகளுக்கு மக்கள் தீர்வு கண்டனர்.

SURA BOOKS

22. i) மதிய உணவுத் திட்டம் ஏற்படுத்தினார்.
ii) புதிய பள்ளிகளைத் திறந்து, இலவசக் கல்வி வழங்க வகை செய்தார்.
iii) வேளாண்மையை மேம்படுத்துதல்,
iv) கால்வாய்களை வெட்டுதல்,
v) அணைகளைக் கட்டுதல் மற்றும்
vi) புதிய தொழிற்சாலைகளை அமைத்தல் போன்ற நலத்திட்ட நடவடிக்கைகளை காமராஜர் மேற்கொண்டார்.

23. i) கேரளத்திலுள்ள வைக்கம் என்னுமிடத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் ஆலயத்திற்குள் நுழைவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது.
ii) இதை எதிர்த்து 1924-ஆம் ஆண்டு பெரியார் சத்தியாகிரகப் போராட்டத்தில் ஈடுபட்டார்.
iii) இறுதியில் திருவிதாங்கூர் அரசு ஆலய நுழைவு தடைச் சட்டத்தைத் தளர்த்தி அனைவரும் ஆலயத்திற்குள் நுழையலாம் என அறிவித்தது.
iv) இதன் காரணமாக பெரியாருக்கு "வைக்கம் வீரர்" என்ற பட்டம் வழங்கப்பட்டது.

## பகுதி – II

24. i) ஐ.நா.வின் கொள்கைக்கு முழு ஆதரவு கொடுப்பதோடு, அக்கொள்கைகள் வெற்றிபெறவும், உலக அமைதியை நிலைநாட்டவும் இந்தியா தொடர்ந்து பாடுபட்டு வருகிறது.
ii) தென் ஆப்பிரிக்காவில் இன ஒதுக்கல் பிரச்சனையை முடிவுக்கு கொண்டு வருதல், சூயஸ் கால்வாய் பிரச்சனை தீர்வு, காங்கோ நாட்டிலும், சைப்ரஸ் தீவிலும் தோன்றிய உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வந்து அமைதியை நிலை நாட்டிய நிகழ்வுகளில் இந்தியா ஐ.நா.வின் தீவிர ஆதரவாளராக செயல்பட்டது.

25. ஜனநாயகம் என்பது 'மக்களால், மக்களுக்காக, மக்களே ஆட்சி செய்வது ஆகும்.' – இதுவே ஜனநாயகம் பற்றி ஆபிரகாம் லிங்கனின் கருத்து.

## பகுதி – III

26. **இந்தியாவின் இயற்கை அமைப்பு ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை :**
i) வடக்கு மலைகள்
ii) வட பெரும் சமவெளிகள்
iii) தீபகற்ப பீடபூமி
iv) கடற்கரைச் சமவெளிகள்
v) தீவுகள்.

27. i) அட்சங்கள் ii) உயரம்
iii) கடலிலிருந்து தூரம் iv) காற்று
v) மலைகளின் அமைவு.

28. i) வெப்பமண்டல பசுமை மாறாக் காடுகள் ஆண்டுக்கு 200 செ.மீ.க்கு அதிகமான மழைப் பொழிவைப் பெறுகின்றன.
ii) இலைகளை உதிர்க்காமல், பசுமை மாறாமல் காணப்படுகின்றன.
iii) மிகவும் அடர்த்தியாக 60 மீட்டர் உயரம் வரை வளரக்கூடியவை.
iv) சூரிய ஒளி தரையில் விழாததால், வளர்ச்சி குறைந்த மரங்களாக மூங்கில்கள், பெரணி மற்றும் கொடிகளும் வளர்கின்றன.

29. வேளாண் தொழிலின் வகைகள் :
அ) பழமையான வேளாண்மை
ஆ) தன்னிறைவு வேளாண்மை
இ) வணிக வேளாண்மை
ஈ) தோட்ட வேளாண்மை

30. சென்னை, பெங்களூரு, ஹைதராபாத், திருவனந்தபுரம் மற்றும் நொய்டா.

31. i) எல்லையோர சாலைகள் தேசிய வளர்ச்சிக்கும், தேசிய ஒற்றுமைக்கும் ஓர் அடையாளச் சின்னமாகும்; இவை வடக்கு மற்றும் வடகிழக்கு எல்லைகளில் அமைக்கப்பட்டுள்ளன.
ii) தேசிய பாதுகாப்பினை பராமரிப்பதற்கும் இந்தியாவின் ஓர் பிரிக்க முடியாத ஒரு கூறாகவும் கருதப்படுகிறது. இந்திய அரசின் எல்லையோர சாலை அமைப்பு இதனை பராமரித்து வருகிறது.

32. **மக்கள் தகவல் தொடர்பு சாதனங்கள் :**
அ) வானொலி ஆ) தொலைக்காட்சி
இ) செய்தித்தாள் ஈ) இணையதளம்
ஆகியவை ஆகும்.

33. **பேரிடர் அபாய நேர்வு குறைப்பின் முக்கிய அம்சங்கள் :**
i) தணித்தல் (கட்டமைப்பு மற்றும் கட்டமைப்பு அல்லாத நடவடிக்கைகள்)
ii) ஆரம்ப முன்னெச்சரிக்கை அமைப்பு
iii) பேரிடர் வரும்முன் தயார் நிலை
iv) மீட்பு.

## பகுதி – IV

34. **நாட்டு வருமானம் :**
நாட்டு வருமானம் என்பது "ஒரு நாட்டில் ஓராண்டு காலத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பின் அளவே ஆகும்." இது, மொத்த நாட்டு உற்பத்தி என்றும் அழைக்கப்படுகிறது.

35. i) 1967-ஆம் ஆண்டு இந்தியாவில் பசுமைப்புரட்சி அறிமுகப்படுத்தப்பட்டது.
ii) இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம் பசுமைப் புரட்சியை அறிமுகப்படுத்தியது.
iii) நிலச்சீர்திருத்தம், அதிக விளைச்சல் தரும் வீரியமுள்ள விதைகளின் பயன்பாடு மற்றும் மேம்படுத்தப்பட்ட பாசன வசதிகள் மூலமாக பசுமைப்புரட்சி அறிமுகப்படுத்தப்பட்டது.

SURA BOOKS

## பிரிவு– III

36.

| | இமயமலையில் உருவாகும் ஆறுகள் | | தீபகற்ப ஆறுகள் |
|---|---|---|---|
| 1. | இமயமலையில் உருவாகும் சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா ஆறுகள் பனி உறைந்த மலைகளில் உருவாகின்றன. | 1. | தீபகற்ப ஆறுகளான மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, காவிரி, நர்மதை மற்றும் தபதி ஆறுகள் தீபகற்ப பீடபூமியில் உருவாகின்றன. |
| 2. | இவை பெரிய ஆற்று வடிநிலங்களையும், நீர்பிடிப்புகளையும் கொண்டவை. | 2. | இவை சிறிய நீர்பிடிப்புகளையும் சிறிய ஆற்று வடிநிலங்களையும் கொண்டவை. |
| 3. | இவை ஆழமான "I" வடிவ குறுகிய பள்ளத்தாக்குகள் வழியாக பாய்கின்றன. | 3. | இவை அகலமாக ஆழமற்ற பள்ளதாக்குகள் வழியே பாய்கின்றன. |
| 4. | இந்த ஆறுகள் வற்றாத ஆறுகளாகும். இவை பருவமழையிலிருந்தும் பனி உருகுவதாலும் நீரைப் பெறுகின்றன. | 4. | இந்த ஆறுகள் பருவ காலங்களில் மட்டுமே ஓடுகின்றன. பருவமழையை நம்பியே நீரைப் பெறுகின்றன. |

37.

| | தென்மேற்குப் பருவக்காற்று | | வடகிழக்குப் பருவக்காற்று |
|---|---|---|---|
| 1. | தென்மேற்குப் பருவக்காற்று ஜூன் முதல் செப்டம்பர் வரை வீசுகிறது. | 1. | வடகிழக்குப் பருவக்காற்று அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் வீசுகிறது. |
| 2. | இது கடலில் இருந்து இந்திய நிலப் பகுதியை நோக்கி வீசுகிறது. | 2. | இது நிலத்திலிருந்து கடலை நோக்கி வீசுகிறது. |
| 3. | இக்காற்று அதிக வெப்பத்தை தாங்கிய காற்றாக உள்ளது. | 3. | இக்காற்று குளிர்ந்த வறண்ட காற்றாகும். |
| 4. | இதனால் மேற்குக் கடற்கரைப் பகுதி நல்ல மழையைப் பெறுகிறது. | 4. | இதனால் சோழமண்டலக் கடற்கரை நல்ல மழையைப் பெறுகிறது. |

38.

| | காற்று சக்தி | | அனல்மின் சக்தி |
|---|---|---|---|
| 1. | காற்றின் வேகத்தினால் பெறப்பட்டு காற்றாலைகள் மூலம் தயாரிக்கப்படுகிறது. | 1. | நிலக்கரி, பெட்ரோலியம், இயற்கை எரிவாயு மூலம் தயாரிக்கப்படுகிறது. |
| 2. | தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், கர்நாடகா, கேரளா, குஜராத், மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்களிலும் மற்றும் இலட்சத்தீவிலும் காற்று சக்தி உற்பத்தி மையங்கள் உள்ளன. | 2. | பஞ்சாப், ஹரியானா, இராஜஸ்தான், கர்நாடகா, கேரளா, ஒடிசா மற்றும் டெல்லி ஆகிய மாநிலங்கள் அனல் மின்சக்தியை உற்பத்தி செய்கின்றன. |
| 3. | எளிதில் புதுப்பிக்கக்கூடியது. | 3. | புதுப்பிக்க இயலாத வளம். |
| 4. | சுற்றுச்சூழலை மாசுபடுத்துவது இல்லை. | 4. | சுற்றுச்சூழலை மாசுபடுத்துகின்றன. |

39.

| | கோடைகாலப் பயிர்கள் (காரிஃப் பயிர்கள்) | | குளிர்காலப் பயிர்கள் (ராபி பயிர்கள்) |
|---|---|---|---|
| 1. | **ஜூன்** மாதம் விதைக்கும் பருவம். | 1. | **நவம்பர்** மாதம் விதைக்கும் பருவம். |
| 2. | **நவம்பர்** மாதம் அறுவடைக் காலம். | 2. | **மார்ச்** மாதம் அறுவடை காலம். |
| 3. | நெல், சோளம், பருத்தி, சணல், கரும்பு, கடலை – முக்கியப் பயிர்கள். | 3. | கோதுமை, புகையிலை, கடுகு, பருப்பு வகை தானியங்கள். |

40.

| | வேளாண் சார்ந்த தொழிலகங்கள் | | கனிமம் சார்ந்த தொழிலகங்கள் |
|---|---|---|---|
| 1. | வேளாண் பொருட்களை மூலப் பொருட்களாக பயன்படுத்துகின்றன. | 1. | கனிம வளம் சார்ந்த தொழிலகங்கள் உலோக மற்றும் உலோகமற்ற பொருட்களை மூலப் பொருட்களாகப் பயன்படுத்துகின்றன. |
| 2. | (எ.கா.) பருத்தி, சணல், சர்க்கரை ஆலைகள் | 2. | (எ.கா.) இரும்பு, எஃகு தொழிலகங்கள். |
| 3. | மகாராஷ்டிரம், குஜராத், மேற்கு வங்காளம், உத்திரப்பிரதேசம், தமிழ்நாடு. | 3. | சோட்டா நாகபுரி பீடபூமி. |

41.

| | நீர் மாசடைதல் | | நிலம் மாசடைதல் |
|---|---|---|---|
| 1. | வேதியியல், இயற்பியல் அல்லது உயிரியல் மாற்றம் நன்னீரின் தரத்தில் ஏற்படுவது. பாக்டீரியா, வைரஸ் கிருமிகள், ஒட்டுண்ணிகள் மற்றும் புழுக்கள் இதற்கு காரணிகள் ஆகும். | 1. | நகரக்கழிவுகள் ஓரிடத்தில் கொட்டப்படுவதாலும், சாக்கடை அடைபட்டு, உடைபட்டு இருப்பதாலும், பூச்சிக்கொல்லி பயன்படுத்துவதாலும், எண்ணெய் மற்றும் எரிபொருள் கொட்டப்படுவதாலும், தொழிலகக் கழிவுகள் நேரடியாக மண்ணில் கலப்பதாலும் நிலம் மாசடைகிறது. |
| 2. | சுற்றுச்சூழல், உணவுச்சங்கிலி பாதிக்கப்படும். நீரின் தரம் குறைந்து **நீரிலுள்ள உயிரினங்கள்** அழியும், உற்பத்தி குறையும். | 2. | இதனால் மண் வளம் பாதிக்கப்படும்.தாவரங்கள், மனிதர்களின் வாழ்வில் நோய்கள் தாக்கும். |

42.

| | ஏற்றுமதி | | இறக்குமதி |
|---|---|---|---|
| 1. | நம் நாட்டின் உபரிப் பொருட்களையும், சேவைகளையும், அந்நியச் செலாவணிக்காக வெளிநாட்டிற்கு **விற்பது.** | 1. | நமக்குத் தேவையான பொருட்களையும், சேவைகளையும், வெளிநாட்டிலிருந்து **வாங்குவதாகும்.** |
| 2. | இந்தியா ஏறத்தாழ 7500 விதமான பொருட்களை உலகின் சுமார் 190 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. | 2. | சுமார் 6000 விதமான பொருட்கள் 140 நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. |
| 3. | விவசாயப் பொருட்கள், தாதுக்கள், கனிமங்கள், தோல் பொருட்கள், இரசாயனப் பொருட்கள், ஆபரணங்கள், ஆடைகள், இயந்திரப் பொருட்கள் போன்றவை முக்கிய ஏற்றுமதிப் பொருட்களாகும். | 3. | போக்குவரத்து சாதனங்கள், இயந்திரக் கருவிகள், மின்னியல் மற்றும் மின் இயந்திரங்கள், கோதுமை, மருந்துகள், பெட்ரோலியம், உரங்கள் போன்றவை முக்கிய இறக்குமதிப் பொருட்களாகும். |
| 4. | ஏற்றுமதி மூலமாக அந்நியச் செலாவணியை **பெறுகிறோம்.** | 4. | இறக்குமதி மூலமாக அந்நியச் செலாவணியை **இழக்கிறோம்.** |

SURA BOOKS

43.

| | நேரிணை வணிகம் | | பல்கிளை வணிகம் |
|---|---|---|---|
| 1. | **இரு நாடுகளுக்கிடையே உடன்பாட்டின்படி** நடைபெறும் வணிகம் நேரிணை வணிகம் ஆகும். | 1. | **பல நாடுகளுக்கிடையே** நடைபெறும் வணிகம் பல்கிளை வணிகம் ஆகும். |
| 2. | இவ்வணிகத்தில் ஒரு நாடு **தன்னிடமுள்ள பொருளை ஏற்றுமதி** செய்துவிட்டு அதற்குப் பதிலாக தனக்குத் **தேவையான பொருளை இறக்குமதி** செய்துகொள்ளும். | 2. | இவ்வணிகத்தில் ஒரு நாடு **தன்னிடமுள்ள பொருளை ஏற்றுமதி** செய்துவிட்டு அதற்கான வருவாயிலிருந்து **வேறொரு நாட்டிடமிருந்து** தனக்குத் **தேவையான பொருளை இறக்குமதி** செய்துகொள்ளும். |

## பிரிவு– IV

44. அ) 1. சர்வதேச சமுதாயம் (1915)
2. உலக அமைதி கூட்டமைப்பு (1917)
3. சுதந்திர நாடுகளின் சர்வதேச சங்கம் (1918)

ஆ) ஜெனிவாவில்.

இ) சர்வதேச சங்கத்தின் மூலம் சுமுகமான முறையில் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

ஈ) 1931-இல்.

45. அ) பெனிடோ முசோலினி

ஆ) 'நம்பு' 'கீழ்ப்படி' 'போராடு' என்ற மூன்று கட்டளைகளையும், 'அதிகப்படை, அதிக மதிப்பு' என்ற முழக்கத்தையும் நடைமுறைப்படுத்தினார்.

இ) நாட்டை உயர்நிலைக்குக் கொணர்தல், தனிமனிதனின் உடமைகளைப் பாதுகாத்தல் மற்றும் ஆற்றல் மிக்க வெளியுறவுக் கொள்கை.

ஈ) எல்லாம் நாட்டிற்காகவே, நாட்டிற்கு எதிராக எதுவுமில்லை, நாட்டிற்கு வெளியே எதுவுமில்லை.

46. அ) ஜான்சி இராணி இலட்சுமிபாய் மற்றும் தாந்தியாதோப்.

ஆ) குவாலியர்

இ) இராணி இலட்சுமிபாய் 1858–ஆம் ஆண்டு ஜூன் மாதம் நடைபெற்ற போரில் கொல்லப்பட்டார்.

ஈ) தப்பிச் சென்ற தாந்தியாதோப் கைது செய்யப்பட்டு கொல்லப்பட்டார்.

**47.** அ) மவுண்ட்பேட்டன் பிரபு.

ஆ) மவுண்ட்பேட்டன் பிரபு.

இ) இத்திட்டத்தின்படி இந்தியா, இந்திய யூனியன் என்றும், பாகிஸ்தான் யூனியன் என்றும் இரு நாடுகளாகப் பிரிக்கப்படும்.

ஈ) இத்திட்டத்தை காங்கிரசும், முஸ்லீம் லீக்கும் ஏற்றுக் கொண்டன.

## பிரிவு – V
## பகுதி – I

48. **ஏகாதிபத்தியத்தின் விளைவுகள் :**

**சாதகமான விளைவுகள் :**

i) வலிமையற்ற நாடுகளில் **போக்குவரத்து** மற்றும் **செய்தித் தொடர்புத்துறை**யில் பல **முன்னேற்றங்கள்** ஏற்பட்டன.

ii) குடியேற்ற நாடுகளில் **கல்வி, மருத்துவம்** மற்றும் **சுகாதாரத்துறைகள் மேம்பட்டன.**

iii) புதிய விவசாய முறைகளால் **உணவுப் பொருள்களின் உற்பத்தி அதிகரிக்கப்பட்டன.**

iv) குடியேற்ற நாட்டு **மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்தன.**

v) நாடுகளில் **அமைதி, கட்டுப்பாடு** மற்றும் **ஒற்றுமை வளர்ந்தன.**

**பாதகமான விளைவுகள் :**

i) குடியேற்ற நாடுகள் தங்களின் **சுதந்திரத்தை இழந்தன.**

ii) மக்களின் **உழைப்பு உறிஞ்சப்பட்டது**டன் அவர்கள் **அடிமைகளாகவும்** நடத்தப்பட்டனர்.

iii) **குடியேற்ற நாடுகள்** மூலப்பொருட்களை வழங்குவதற்கும் பொருட்களின் **விற்பனை சந்தைகளாகவும் மட்டுமே** விளங்கின.

iv) குடியேற்ற நாடுகளில் **உள்நாட்டு தொழில்கள் நசுக்கப்பட்டு** ஏழ்மையும், வேலையின்மையும் அதிகரித்தன.

v) பாரம்பரிய விவசாய முறை மாற்றப்பட்டு உணவுப் பொருள் உற்பத்திக்குப் பதிலாக மூலப்பொருட்களை பயிரிடும்படி அந்நாட்டு மக்கள் கட்டாயப்படுத்தப்பட்டனர்.

vi) மேற்கத்திய கலாச்சார அறிமுகத்தினால், **பாரம்பரிய கலாச்சாரம் அழிய**த் தொடங்கியது.

vii) அடிமை வியாபாரத்தின் காரணமாக **சில ஆப்பிரிக்க இனங்கள் மறைந்தன.**

viii) சில **குடியேற்ற நாடுகளில் இன வேறுபாட்டுக் கொள்கை** பின்பற்றப்பட ஏகாதிபத்தியமே காரணமாயிற்று.

SURA BOOKS

**(அல்லது)**

**ஆ) ஐ.நா.வின் முக்கியமான சாதனைகள் :**

**அரசியல்** பிரச்சனைகளுக்கு **பாதுகாப்பு மன்றம்** மூலமும், **சட்டப்** பிரச்சனைகளுக்கு **பன்னாட்டு நீதிமன்றம்** மூலமும், **பிற பிரச்சனைகளுக்கு சிறப்பு அமைப்புகள் மூலமும்** தீர்வு காணப்படுகிறது.

i) **இஸ்ரேல்–பாலஸ்தீனம், ஈரான்–ஈராக் சிக்கல்களை முடிவுக்கு** கொண்டு வந்துள்ளது.

ii) **ஆப்கானிஸ்தானில்** இருந்த **இரஷ்யப் படைகளை வெளியேற்றியது.**

iii) **1963–ஆம் ஆண்டு அணு சோதனை தடைச் சட்டத்தை** நிறைவேற்றியது.

iv) 1996–ஆம் ஆண்டு **தொடர் அணு சோதனை தடைச் சட்டத்தை** நிறைவேற்றியது.

v) **1992–இல்** ரியோ–டி–ஜெனிரோவில் நடத்தப்பட்ட மாநாட்டில் **'அறிக்கை–21'** என்ற கோட்பாட்டினை நிறைவேற்றியது. அதன்படி **இயற்கைச் சூழலைப் பாதுகாத்து, பொருளாதார மேம்பாடு அடைய** அனைத்து நாடுகளும் உறுதி பூண்டன.

vi) ஐ.நா.வின் பெண்கள் மேம்பாட்டு நிதி, பன்னாட்டு ஆய்வு மற்றும் **பெண்களின் முன்னேற்றத்திற்கான பயிற்சி நிறுவனங்கள்** மூலம் **100** நாடுகளில் பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான செயல்பாடுகளை ஊக்குவித்தது.

vii) 1956 – ஆம் ஆண்டு ஐ.நா. தனது **அமைதிப்படையை எகிப்துக்கு அனுப்பி சூயஸ் கால்வாய் சிக்கலை முடிவுக்கு கொண்டு வந்தது.**

viii) **கொரியப் போர், வியட்நாம் போர்** ஆகியவற்றை **முடிவுக்கு கொண்டு வந்தது.**

**(அல்லது)**

**இ)** சட்ட மறுப்பு இயக்கம் அல்லது உப்புச் சத்தியாகிரகம் 1930 :

i) முழு சுதந்திரம் பெறுவதை நோக்கமாகக் கொண்டு **காந்தி 1930–**ஆம் ஆண்டு **சட்ட மறுப்பு இயக்கத்தைத் தொடங்கினார்.**

ii) பல லட்சக்கணக்கான மக்கள் பயன்படுத்திவரும் **உப்பு மீது** ஆங்கில அரசு **வரி விதித்தது.**

iii) இது ஏழை எளிய மக்களைப் பெரிதும் பாதித்தது.

iv) எனவே, இதனை எதிர்த்து **காந்தியடிகள்** மார்ச் 12, 1930–ஆம் ஆண்டு **சட்ட மறுப்பு போராட்டத்தை மேற்கொண்டார்.**

v) **சரோஜினி நாயுடு** உட்பட **78 தொண்டர்களுடன் காந்தி** அகமதாபாத்திலுள்ள **சபர்மதி** ஆசிரமத்திலிருந்து பாதயாத்திரை தொடங்கி, சுமார் **400 கி.மீ.** பயணம் மேற்கொண்டு குஜராத் கடற்கரை பகுதியிலுள்ள **தண்டி** வந்தடைந்தார்.

vi) இது **தண்டி யாத்திரை** அல்லது **உப்புச் சத்தியாகிரகம்** என்றழைக்கப்பட்டது.

vii) வழி நெடுகிலும் ஆயிரக்கணக்கான மக்கள் காந்தியடிகளுடன் சேர்ந்து பாதயாத்திரை மேற்கொண்டனர்.

viii) தண்டியில் கடல் நீரிலிருந்து உப்பு காய்ச்சி **ஏப்ரல் 6–ஆம்** நாள் உப்புச் சட்டங்களை மீறியதால் **காந்தியடிகள் கைது** செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

ix) தமிழ்நாட்டில் **சி. ராஜகோபாலாச்சாரியார்** தலைமையில் **திருச்சியிலிருந்து** தொண்டர்கள் பாதயாத்திரை மேற்கொண்டு தஞ்சாவூர் கடற்கரைப் பகுதியில் **வேதாரண்யத்தில்** உப்புச் சட்டங்களை மீறி, **உப்பு காய்ச்சினர்.**

## பகுதி – II

**49. (அ) சார்க் அமைப்பு :**

i) சார்க் என்பது தெற்கு ஆசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பு ஆகும்.

ii) அமைதியை நிலைநாட்ட, பிராந்தியக் கூட்டமைப்பை ஏற்படுத்தும் முயற்சியில் இந்தியா ஈடுபட்டதன் விளைவாக சார்க் அமைப்பு தோன்றியது.

iii) வங்காளதேசம், பூடான், இந்தியா, மாலத்தீவு, நேபாளம், பாகிஸ்தான், இலங்கை ஆகிய ஏழு நாடுகள் உறுப்பு நாடுகளாக இருந்தன.

iv) இதன் முதல் கூட்டம் டிசம்பர் 7, 1985 ஆம் ஆண்டு வங்காளத்தில் டாக்கா நகரில் நடைபெற்றது.

v) வங்காளதேசத்தைச் சேர்ந்த அபுல் ஆஷான் சார்க் அமைப்பின் முதல் பொதுச் செயலாளராக பொறுப்பேற்றார்.

vi) 2007 ஏப்ரல் 3இல், டெல்லியில் நடைபெற்ற சார்க் வருடாந்திர மாநாட்டில் ஆப்கானிய அதிபர் ஹமீது கர்சாய் கலந்து கொண்டார்.

vii) தற்போது ஆப்கானிஸ்தான் இதில் எட்டாவது உறுப்பு நாடாக இடம் பெற்றுள்ளது.

viii) நேபாளத்தின் தலை நகர் காத்மண்டுவில் 2014 நவம்பர் 26, மற்றும் 27 இல் சார்க் அமைப்பின் 18வது மாநாடு நடைபெற்றது.

ix) சார்க் அமைப்பின் உறுப்பு நாடுகள் தங்களுக்குள் பரஸ்பர நல்லுறவின் அடிப்படையில் செயல்பட்டு வருகின்றன.

x) போக்குவரத்து, கடிதசேவை, சுற்றுலா, வானியல், சுகாதாரம், வேளாண்மை, கிராமப் புனரமைப்பு மற்றும் தகவல்

SURA BOOKS

தொடர்பு போன்றவற்றில் உதவி செய்து கொள்ளுதல் என்ற தீர்மானத்தில் சார்க் அமைப்பு நாடுகள் செயல்பட்டு வருகின்றன.

**(அல்லது)**

**ஆ) தேர்தல் முறை இரு வகைப்படும். அவை :**

**1) நேரடித் தேர்தல் முறை**

**2) மறைமுகத் தேர்தல் முறை**

**1) நேரடித் தேர்தல் முறை :**

i) குடிமக்கள் தாங்களே நேரடியாக வாக்களித்து தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறை "நேரடித் தேர்தல் முறை" எனப்படும்.

ii) இந்தியாவில் சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரடித் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இடைத்தேர்தலும் இடைபருவத் தேர்தலும் நேரடித் தேர்தல் முறையில் நடைபெறுகின்றன.

**அ) இடைத்தேர்தல் :**

ஒரு தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர், மரணமடைந்தாலும், பதவியைவிட்டு விலகினாலும் அவ்விடத்தை நிரப்ப அத்தொகுதியில் மட்டும் நடைபெறும் தேர்தலுக்கு இடைத்தேர்தல் என்று பெயர்.

**ஆ) இடைப் பருவத் தேர்தல் :**

நாடாளுமன்றமோ, மாநில சட்ட சபைகளோ, பதவிக்காலம் முடிவதற்குள் இடையில் கலைக்கப்பட்டால், மீண்டும் அவற்றுக்குத் தேர்தல் நடத்தப்படும். இதற்கு இடைப்பருவத் தேர்தல் என்று பெயர்.

**2) மறைமுகத் தேர்தல் முறை :**

i) குடிமக்கள் நேரடியாக தங்களது வாக்குகளை செலுத்தாமல், தங்கள் பிரதிநிதிகளைக் கொண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை மறைமுகத் தேர்தல் முறையாகும்.

ii) நாடாளுமன்ற மேல்சபை உறுப்பினர்கள், குடியரசுத் தலைவர் மற்றும் குடியரசுத் துணைத் தலைவர் ஆகியோர் இம்முறை மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

**(அல்லது)**

**இ) நுகர்வோர் உரிமைகள் :**

i) நுகர்வோரின் பொருட்கள் அவர்களது உயிருக்கும், அவர்களது உடமைக்கும் பாதிப்பினை ஏற்படுத்தும் வேளையில் அவர்கள் அந்தப் பொருட்களைக் குறித்தும், அவர்களது சேவைகள் குறித்தும் தங்களது எதிர்ப்பினைத் தெரிவிக்கும் உரிமை பெற்றுள்ளனர்.

ii) பொருட்களின் தரம், அளவு, தன்மை, அதனுடைய உண்மை நிலை, பொருட்களின் விலை ஆகியவை குறித்து நுகர்வோருக்கு தெரியப்படுத்த வேண்டும்.

iii) பல வகையான பொருட்களை நியாயமான விலையில் பெறுவதற்கான வாய்ப்பும் வசதிகளும் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

iv) தனிப்பட்ட வியாபாரிகளிடமிருந்து நுகர்வோர், பொருளை வாங்கும்போது அந்தப் பொருள் தரமானதா, நியாயமான விலையில் இருக்கிறதா என்று சொல்வதற்கு உரிமை பெற்றுள்ளார்கள்.

v) நுகர்வோரின் நலன்கள், சம்பந்தப்பட்ட துறைகள் மூலம் தீர்வு செய்யப்பட வேண்டும்.

vi) தவறான வியாபார முறைகள் குறித்தோ அல்லது நுகர்வோர் தாங்கள் சுரண்டப்படுகின்ற வேளையிலோ, தங்களுக்கு சரியான தீர்ப்பு கிடைக்கும் வகையில் நுகர்வோர் தங்களது குறைகளை எடுத்துக்கூறி தீர்வைப் பெற்றுக்கொள்ளலாம்.

vii) நுகர்வோரின் நலனுக்கான பொருட்கள் பற்றிய தகவல்கள் அடங்கிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

viii) 2005–ஆம் ஆண்டு அக்டோபர் 12–ஆம் நாள் "தகவல் அறியும் சட்டம்" பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

ix) இதனால் பொது நிறுவனங்கள் சார்ந்த அனைத்து நடவடிக்கைகளையும் அறிந்து கொள்வது பொதுமக்களின் அடிப்படை உரிமையாகும்.

## பகுதி – III

**50. மழைநீர் சேமிப்பின் அவசியம் :**

i) இந்தியா வெப்பமண்டல பருவக்காற்று காலநிலையைப் பெற்றுள்ளது.

ii) இக்காலநிலை பருவகாலங்களில் மழையைத் தருகின்றது.

iii) இம்மழை சீரற்ற, நிலையற்ற முறையில் பொழிகிறது.

SURA BOOKS

iv) இதனால் பெரும்பாலான நேரங்களில் **மழைநீர்** குறைவாகவே கிடைக்கின்றது.

v) எனவே மழைநீரை சேமிப்பது மிகவும் அவசியமாகிறது.

**மழைநீர் சேகரிக்கும் முறை :**

i) மழைநீரை ஆழமான நிலத்தடி நீர் மட்டத்துடன் ஊடுருவல் செய்து தேவை ஏற்படும்போது குழாய்கள் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

ii) மழைநீரை நேரடியாக சேகரித்து சேமிப்பதும், நமக்குத் தேவையான நீரை தரைக்கு அடியில் சேகரித்துப் பின்னர் பயன்படுத்திக் கொள்வதும் **மழைநீர் அறுவடை** எனப்படும்.

**(அல்லது)**

**ஆ) அமில மழையின் விளைவுகள் :**

i) அமில மழையினால் கடலிலுள்ள மிக நுண்ணிய உயிரிகளான பிளாங்டன் உயிர் வாழ முடியாது.

ii) மீன் உணவான பிளாங்டன் இல்லாவிட்டால் கடல்வாழ் உயிரினங்கள் பாதிக்கப்படும்.

iii) மேலும், உணவுச் சங்கிலியும் பாதிக்கப்படும்.

iv) கடல்வெப்பம் அதிகரித்து பவளப்பாறைகளின் வளர்ச்சி பாதிக்கப்படும்.

v) பவளப்பாறைகள் கடல்நீரிலுள்ள கார்பனை சுண்ணாம்புக் கட்டிகளாக மாற்றி கார்பனின் அளவை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கின்றன.

vi) $10^{\circ}$ செல்சியஸ் வெப்பத்திற்கு மேல்தான் முருகைகள் வளர்கின்றன.

vii) காடுகள் மற்றும் பாலைவனங்கள் அமில மழையால் பாதிக்கப்படுகின்றன.

viii) உயிரினப்பன்மை இழப்பு மற்றும் இனமறைவுகள் இதனால் ஏற்படுகின்றன.

ix) மண்ணில் அமிலமழையால் சத்து அரிக்கப்பட்டு, இயற்கை தாவரங்களையும் பாதிக்கின்றன.

**(அல்லது)**

**இ)** 1) ஆரம்ப முன்னெச்சரிக்கை அமைப்புகள் எனப்படுவது, அவசர காலகட்டங்களில் அபாயநேர்வுகளைக் குறைப்பதற்கான ஒரு தகவல் அளிப்புத் தொகுதி என விவரிக்கப்படுகிறது.

2) இத்தொகுதி, இயற்கைப் புவி இயல்பு இடர்கள், உயிரியல் சம்பந்தப்பட்ட இடர்கள், சமுதாய மற்றும் அரசியல் சம்பந்தப்பட்ட அவசர காலக்கட்டங்கள், தொழிலக மற்றும் நுட்பவியல் இடர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட மற்ற இடர்களின் போது செயல்படுத்தும் ஓர் அமைப்பாகும்.

3) ஆரம்ப முன்னெச்சரிக்கை அமைப்புகள் இல்லையெனில், பயிற்சி மற்றும் வெளியேற்றுதல் போன்ற வழிமுறைகள் பொருத்தமற்றதாகிவிடும்.

4) மேலும் ஆரம்ப முன்னெச்சரிக்கை அமைப்பு என்பது, நான்கு முக்கிய சம்பந்தப்பட்ட கூறுகளை உள்ளடக்கியது ஆகும்.

**அவையாவன :**

1. ஆழ்ந்து கவனித்தல் மற்றும் பதிவுகளைப் புரிந்து கொள்ளுதல்
2. அபாயநேர்வு பற்றிய விழிப்புணர்வு மற்றும் அடையாளம் காணுதல்
3. எச்சரிக்கை மற்றும் பரவச் செய்தல்
4. பொருத்தமான பிரதிபலிப்பு

## பகுதி – IV

**51. நாட்டு வருமானம் :**

நாட்டு வருமானம் என்பது ஒரு நாட்டில் ஓராண்டு காலத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பின் அளவே ஆகும். நாட்டு வருமானம், மொத்த நாட்டு உற்பத்தி (GNP - Gross National Product) என்றும் அழைக்கப்படுகிறது. எனவே, நாட்டு வருமானம் என்பது ஒரு நாட்டின் மொத்த வருமானத்தைக் குறிக்கும் சொல்லாகும்.

**அடிப்படை கருத்துக்கள் :**

**i) மொத்த நாட்டு உற்பத்தி**

- ஒரு நாட்டில் ஓராண்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் பணிகளின் மதிப்பு,
- அந்நாட்டு மக்கள் ஓராண்டில் ஈட்டிய வருமானம்,
- வெளிநாட்டு முதலீட்டின் மூலம் கிடைக்கும் இலாபம்,

இவை மூன்றும் சேர்ந்ததே மொத்த நாட்டு உற்பத்தியாகும்.

**ii) மொத்த நாட்டு உற்பத்தி**

- ஒரு நாட்டின் புவியியல் எல்லைக்குள் ஓர் ஆண்டில் அந்நாட்டிற்குச் சொந்தமான உற்பத்திக் காரணிகளால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பாகும்.
- உற்பத்திக் காரணிகள் என்பது நிலம், உழைப்பு, மூலதனம் மற்றும் தொழிலமைப்பைக் குறிக்கும்.

SURA BOOKS

**(அல்லது)**

**ஆ) பசுமைப் புரட்சி:**

i) 1967–ஆம் ஆண்டு இந்தியாவில் பசுமைப்புரட்சி, இந்திய வேளாண்ஆராய்ச்சி நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்டது.

ii) நிலச்சீர்திருத்தம், அதிக விளைச்சல் தரும் வீரியமுள்ள விதைகள் பயன்பாடு மற்றும் மேம்படுத்தப்பட்ட பாசன வசதிகள் மூலமாக பசுமைப்புரட்சியை இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம் அறிமுகப்படுத்தியது.

iii) நில உச்சவரம்பு, இடைத் தரகர்களின் ஆதிக்கத்தை நீக்குதல் மற்றும் நிலக் குத்தகை போன்றவற்றிற்கான நிலச்சீர்திருத்தச் சட்டங்களை அரசு விரைவாகச் செயல்படுத்தி வேளாண் வளர்ச்சிக்கு அடிகோலியது.

iv) ஆச்சார்ய வினோபா பாவேயின் பூமிதான இயக்கத்தினால் மில்லியன் ஏக்கர் கணக்கான நிலங்கள் நிலச்சுவான்தாரர்களிடமிருந்து தானமாக பெறப்பட்டு நிலமில்லா ஏழை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

v) கோதுமை மற்றும் அரிசி போன்ற உணவுப் பயிர்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்காக மிகுந்த வீரியமுள்ள விதைகள் பயன்படுத்தப்பட்டன.

vi) இவற்றுக்கான நீர்ப்பாசன வசதிகள், இரசாயன உரங்கள், பண ஆதாரங்கள், மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் ஆகியவற்றின் தேவை நிறைவேற்றப்பட்டது.

vii) பசுமைப் புரட்சியின் விளைவாக இந்தியாவின் பெரும்பான்மையான மாநிலங்களில் உணவு உற்பத்தி அதிகரித்தது.

viii) இதனால் உணவு உற்பத்தியில் இந்தியா தன்னிறைவை அடைந்தது.

xi) அதிக விளைச்சல் தரும் விதைகளைப் பயன்படுத்துவதற்கு இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம், இந்திய வேளாண் பல்கலைகழகங்களான லூதியானா, பந்த்நகர் மற்றும் கோயம்புத்தூர் ஆகியவை முக்கியக் காரணங்களாகும்.

**(அல்லது)**

**இ)** i) **அனல்மின் உற்பத்தி :**
தமிழ்நாட்டில் **எண்ணூர், தூத்துக்குடி, நெய்வேலி** மற்றும் **மேட்டூரில்** அனல் மின் உற்பத்தி நிலையங்கள் உள்ளன.

ii) **நீர்மின் நிலையங்கள் :**
தமிழ்நாட்டில் நீர்மின் நிலையங்கள் **மேட்டூர், குந்தா, பெரியார் அணை, கோதையாறு அணை, பைக்காரா, சிங்காரா** மற்றும் **மாயாரில்** அமைந்துள்ளன.

iii) **அணுமின் சக்தி உற்பத்தி :**
தமிழ்நாட்டில் அணுமின்சக்தி உற்பத்தி நிலையங்கள் **கல்பாக்கத்திலும், கூடங்குளத்திலும்** அமைந்துள்ளன.

iv) **காற்று மின் சக்தி :**
**மரபுசாரா மின் உற்பத்தி**யில் காற்று மின்சக்தி தமிழ்நாட்டில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் **கோயம்புத்தூர், கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி** மற்றும் **இராமநாதபுரம்** ஆகிய மாவட்டங்களில் **காற்றாலைகள்** உள்ளன.

v) **உயிரிப் பொருட்கள் எரிசக்தி :**

1) உயிரிப் பொருட்கள் எரிசக்தி ஒரு **மரபுசாரா மின் உற்பத்தி முறை**யாகும்.
2) இது **வேளாண் பொருட்களின் கழிவிலிருந்து** பெறப்படுகிறது.
3) இம்முறையில் தமிழ்நாட்டில் **தருமபுரி, நாமக்கல்** மாவட்டங்களில் மின் உற்பத்தி நடைபெறுகிறது.

vi) **தமிழ்நாட்டில் வளர்ச்சி :**

1) தமிழ்நாட்டில் அதிகரித்து வரும் மின்தேவையை ஈடுகட்ட **8315 மெகாவாட்** மின்சாரத்தை உற்பத்தி செய்ய மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.
2) **தேசிய அனல்மின் கழகம்** மற்றும் **தமிழ்நாடு மின்சார வாரியம்** ஆகியவற்றின் **கூட்டு முயற்சி**யாக **திருவள்ளூர்** மாவட்டத்தில் உள்ள **வல்லூரில்** அனல்மின் நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது.
3) இத்திட்டங்கள் **தமிழ்நாட்டின் தேவையை நிறைவு செய்யும்** என்று எதிர்பார்க்கப்படுகிறது.

SURA BOOKS

## பிரிவு – VI

52. **காலக்கோடு :** 1910 முதல் 1930 வரை

**எவையேனும் ஐந்து நிகழ்வுகளை எழுதினால் போதுமானது.**

1910
1911 - வங்கப் பிரிவினை நீக்கம்
1914 - முதல் உலகப்போர் தொடக்கம்
1915
1916 - தன்னாட்சி இயக்கம், லக்னோ உடன்படிக்கை
1917 - ஆகஸ்டு அறிக்கை
1918 - முதல் உலகப்போர் முடிவு
1919 - மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தம், ரௌலட் சட்டம், ஜாலியன்வாலாபாக் படுகொலை
1920 - ஒத்துழையாமை இயக்கம்
1922 - சௌரி சௌரா சம்பவம், ஒத்துழையாமை இயக்கம் கைவிடல்
1923 - சுய ராஜ்ஜியக் கட்சி தோற்றம்
1925
1927 - சைமன் குழு அமைக்கப்பட்டது
1928 - சைமன் குழு இந்தியா வருகை
1929 - லாகூர் காங்கிரஸ் மாநாடு
1930 - உப்புச் சத்தியாகிரகம், சட்ட மறுப்பு இயக்கம், தண்டியாத்திரை, முதல் வட்டமேஜை மாநாடு

SURA BOOKS

## பிரிவு – VII

**53. (அ) ஆசிய வரைபடத்தில் கீழ்க்கண்டவற்றினை குறிக்கவும்**

**(i)** பார்மோசா **(ii)** சாகலின் தீவுகள் **(iii)** பசுபிக் பெருங்கடல் **(iv)** மஞ்சூரியா **(v)** காண்டன்




SURA BOOKS

**53. (ஆ) இந்திய வரைபடத்தில் கீழ்க்கண்டவற்றினைக் குறிக்கவும்.**

**(i)** காஷ்மீர் **(ii)** அமிர்தசரஸ் **(iii)** செளரி செளரா **(iv)** தண்டி **(v)** வேதாரண்யம்




SURA BOOKS

**54)** **கொடுக்கப்பட்ட இந்திய வரைபடத்தில் ஏதேனும் பத்து இடங்கள் / பகுதிகளை குறியிடுக.**

**(i)** பாமீர் முடிச்சு **(ii)** கங்கை ஆறு **(iii)** சோட்டா நாகபுரி பீடபூமி **(iv)** வட சர்க்கார் கடற்கரை **(v)** தென்மேற்கு பருவக்காற்று வீசும் திசை **(vi)** அந்தமான் நிக்கோபார் தீவுகள் **(vii)** பருத்தி விளையும் ஒரு பகுதி **(viii)** சென்னை **(ix)** தார் பாலைவனம் **(x)** மன்னார் வளைகுடா **(xi)** சில்கா ஏரி **(xii)** சுந்தரவனம் **(xiii)** ஜாம்ஷெட்பூர் **(xiv)** கொச்சி **(xv)** பாக்ஜலசந்தி




***